**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 82/2020**

2025–ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 22–ம் நாள் திங்கட்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா.சந்திரமோகன்.,பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 22.09.2025 | தகப்பனார் பெயர்: | சோமுபிள்ளை |
| பெயர்: | ராமதாஸ்<br>(DW–1 Cross ) | தாலுக்கா: | சீர்காழி |
| கிராமம்: | எண்ணக்குடி | சமயம்: | |
| தொழில்: | விவசாயம் | வயது : | 73/2025 |

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை : 22.09.2025**

**(ஆரம்பித்த நேரம்– 12.20)**

1. வாதி மதியழகன் எனது உடன்பிறந்த சகோதரர் என்றால் சரிதான். எனது தகப்பனாரின் பூர்வீகம் என்பது கும்பகோணம் அருகிலுள்ள காவற்கூடம் என்பதாகும். எங்களுக்கு பூர்வீக கிராமத்தில் சொந்தமாக சொத்துக்கள் இருந்ததா என்றால் இருந்தது. எனது தகப்பனாரின் வாரிசுகளாக நான், வாதி மதியழகன், மற்றும் ஒரு சகோதரி உள்ளனர். எனது சகோதரியின் பெயர் அமிர்தவள்ளி என்றால் சரிதான். எனக்கு திருமணம் நடைபெற்றது முதல் கும்பகோணத்தில் வசித்து வந்தேன் என்றால் சரிதான்.

2. எனக்கு தற்பொழுதும் ஆதார் அட்டை, வாக்காளர் அடையாள அட்டை போன்றவைகள் எனது கும்பகோண பூர்வீக கிராம முகவரியில் இருக்கிறதா என்றால் இல்லை, தற்போது வசித்து வரும் முகவரியில் உள்ளது. நான் தற்போது எங்கு வசித்து வருகிறேன் என்றால் எனது மகள் வீடான எண்ணக்குடியில் வசித்து வருகிறேன். தாவா சொத்தில் வீடு எதுவும் இல்லை என்றால் முன்பு வீடு இருந்தது, தற்போது இல்லை. அந்த வீட்டிற்கு மின்சார வசதி கிடையாது, கதவு

எண் எனக்கு தெரியாது. நான் எப்போதுமே அந்த முகவரியில் இல்லை, வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

3. தாவா சொத்திற்கு பக்கத்தில் வாதி மதியழகன் வீடு கட்டி குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். வாதிக்கு விவசாயம் செய்வது, ஆடு, மாடு வளர்ப்பது தான் பிரதான தொழில் என்றால் சரிதான். தாவா சொத்தில் வாதி மாட்டுக் கொட்டகை வைத்து பராமரித்து வருகிறார் என்றால் நான் அங்கு போகவில்லை. நான் தாவா சொத்திற்கு எப்போது கடைசியாக சென்றேன் என்றால் எனக்கு 42 வயதில் திருமணம் நடைபெற்றது, அது முடிந்த ஒரு வருடத்திற்குள் பிரச்சனை ஆரம்பமானது. மாதவன் என்பது எனது மைத்துனர் என்றால் சரிதான். அவர் எனது சகோதரியின் கணவர்.

4. எனது முதல் மனைவியின் பெயர் ஆனந்தவள்ளி. ஆனந்தவள்ளி கீழமாத்தூரைச் சேர்ந்தவர். வழக்குச் சொத்து கீழமாத்தூரில்தான் உள்ளது என்றால் சரிதான். மாதவன் தனது சகோதரி ஆனந்தவள்ளிக்காக தாவா சொத்தை வாங்கிக் கொடுத்தார் என்றால் சரிதான், ஆனால் பணம் நான் கொடுத்தேன். குடும்பத் தலைவர் என்ற அடிப்படையில் அந்த சொத்திற்கு எனது பெயரில் பட்டா வழுங்கப்பட்டது, மற்றபடி அந்த சொத்தில் எனக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல.

5. தாவா சொத்தில் நான் அத்துமீறி நுழைந்ததற்காக வாதியால் என் மீது புகார் கொடுக்கப்பட்டு வழக்கு பதியப்பட்டது என்றால் இல்லை, தற்போதுதான் கொடுத்துள்ளார். நான் இந்த வழக்கில் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அதில் வாதி என் மீதும், 2ம் பிரதிவாதி மீதும் புகார் கொடுத்துள்ளார் என குறிப்பிட்டு கூறியுள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்து வாதியின் அனுபவத்தில் தான் உள்ளது, நான் அத்துமீறியதால்தான் வாதி தரப்பில் புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல.

6. இந்த வழக்கில் தாவா சொத்திற்கான அரசாங்கத்தால் வழங்கப்பட்ட அசல் பட்டா எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த

பட்டாவை வாதிதான் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 ஆவணம் பட்டாவானது சோமுபிள்ளை மகன் ராமதாஸ் என்ற பெயரில் உள்ளது என்றால் சரிதான். நான் கடந்த 13.04.2013ல் வாதியிடம் ரூ. 55,000/- பெற்றுக்கொண்டு தாவா சொத்தை வாதிக்கு பதிவு செய்யாத கிரய ஆவணம் ஏற்படுத்தி கொடுத்திருக்கிறேன் என்றால் சரியல்ல.

7. நான் வாதியிடம் கிரயம் செய்து கொடுத்ததால்தான் அசல் பட்டாவை வாதியிடம் கொடுத்துவிட்டேன் என்றும், அதனால்தான் இந்த வழக்கில் நான் பட்டாவை தாக்கல் செய்யவில்லை என்றும், வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் சொன்னால் சரியல்ல. 13.04.2013 தேதியிட்ட ஆவணத்தில் என்னை எந்த நாளில் அழைத்தாலும் சார் பதிவாளர் அலுவலகம் வந்து தங்கள் பெயருக்கு பத்திரம் செய்து தர சம்மதிக்கிறேன் என்றுள்ளது என்றால் சரிதான். 13.04.2013 தேதியிட்ட ஆவணத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதா என்றால் அது என்னுடையதல்ல, போர்ஜரியாக போடப்பட்டுள்ளது.

8. 13.04.2013 தேதியிட்ட ஆவணத்தில் நான் கையெழுத்து செய்துவிட்டு தற்போது வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதி எனக்கு 17.06.2020ல் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். அதற்கு நான் பதிலறிவிப்பு அனுப்பினேனா என்றால் அனுப்பியுள்ளேன். தாவா சொத்தை நான் வாதிக்கு கிரயம் செய்து கொடுத்துவிட்டதாலும், அனுபவத்தை அவர் வசம் விட்டுவிட்டதாலும் நான் பதிலறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரியல்ல.

9. எனது முதல் விசாரணையில் திருவாரூர் மாவட்டம் குடவாசல் தாலுக்கா எண்ணக்குடியில் வசித்து வருவதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். நான் கீழமாத்தூரில் வசித்து வந்ததற்காக ஆவணங்கள் ஏதேனும் இந்த வழக்கில் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாவா சொத்தில் உள்ள வீட்டில் விட்டுவிட்டு போய்விட்டேன். தாவா சொத்தில் நான் அனுபவத்தில் இருந்ததற்கான

ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. கடந்த 40 வருடங்களாக தாவா சொத்தில் நான் அனுபவத்தில் இல்லை என்றால் சரியல்ல.

10. தாவா சொத்தில் நான் ஒருபோதும் வசிக்கவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. வாதி கோரியபடி தீர்ப்பாணை செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. 13.04.2013 தேதியிட்ட ஆவணத்தில் உள்ளபடி தாவா சொத்தை வாதிக்கு கிரயம் செய்து கொடுக்க வேண்டும் என்றால் சரியல்ல. நான் ராஜமூர்த்தி என்பவரிடம் உடன்படிக்கை செய்ததாக கடந்த 08.07.2020 தேதியிட்ட ஆவணத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான், ஆனால் அது குறியீடு செய்யப்படவில்லை. அதுபோல் எந்த ஆவணமும் ஏற்படவில்லை, அது வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

11. நான் ஏற்கனவே தாவா சொத்தை வாதிக்கு கிரயம் செய்து கொடுத்துவிட்டதால் ராஜமூர்த்தி என்பவரிடம் உடன்படிக்கை செய்துகொள்ள எனக்கு உரிமையில்லை என்று சொன்னால் சரியல்ல. வாதிக்கு கிரயம் செய்துகொடுத்துவிட்டு வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து வாதியின் வசத்திலும் அனுபவத்திலும் உள்ளது என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது.**

**மறு விசாரணை இல்லை.**

**(முடிவு நேரம்– 13.06)**